**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மதுராந்தகம்.**

**அ.வ.எண். 144/2017**

**இந்த நீதிமன்றத்து எழுத்தர் திரு.மோகன் என்பவரால் முறையாக பிரமாணம் செய்யப்பட்டு நீதிமன்ற சாட்சி 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்குட்பட்டு 2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 25ம் நாள் பதிவு செய்யப்பட்டது.**

| | |
|---|---|
| **பெயர். கவிதா** | **வயது** |
| **த.பெ(அ) க.பெ** | **மதம்** |
| **கிராமம்** | **வட்டம்** |

**<u>நீ.ம.சா.1முதல் விசாரணை</u>**

**25.06.2024**

இந்த வழக்கில் நான் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு வாதி பிரதிவாதி வழக்கறிஞர்களுக்கும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலைமை நிலஅளவையர் ஆகியோர்களுக்கும் அறிவிப்பு கொடுத்து 16.12.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் தாவா சொத்தினை பார்வையிட்டேன். சர்வே எண் 166/7 எ 2 மற்றும் 166/7 எ 1 ஆகிய சொத்துகளை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி எனக்கு உத்தரவு வழங்கப்பட்டது. சர்வே எண் 166/7 எ 1ல் 7 செண்ட் நிலத்தினை

சர்வேயர் வைத்து அளவீடு செய்யும்போது அதில் 6 1/2 செண்ட் தான் இருந்தது. சர்வே எண் 166/7 எ 2ல் 2 செண்ட் நிலத்தினை சர்வேயர் வைத்து அளவீடு செய்யும்போது அதில் 2 1/2 செண்ட் இருந்தது. கூடுதலாக இருந்ததால் 1/2 செண்டு நிலத்தை சர்வேயர் வைத்து அளவீடு செய்தேன். அதை எனது மாதிரி வரைபடத்தில் காண்பித்துள்ளேன். மேற்சொன்னவாறு எனக்களித்த உத்தரவின்படி தாவா சொத்துகளை அளவீடு செய்து எனது அறிக்கை மற்றும் மாதிரி வரைபடத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (அந்த அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் முறையே நீ.மா.சா.ஆ.1 மற்றும் நீ.மா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எனது அறிக்கையுடன் நிலஅளவையர் அளித்த அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன். (அது நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இரண்டு சர்வே எண்களின் 4 பக்க எல்லைகளை நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாரண்டில் குறிப்பிட்டுள்ள

சொத்துகளின் இயல்புநிலைகள் குறித்து நான் எனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சொத்துகளை அளவீடு செய்யுமாறு வாரண்டில் குறிப்பிடடிருந்ததால் இயல்புநிலை குறித்து நான் சொல்லவில்லை. நான் பார்வையிடும்போது சர்வே எண் **166**/**7** எ **2** காலி மனையாக இருந்தது என்றால் சரிதான். சர்வே எண் **166**/**7** எ **2** ஆனது ட வடிவில் இருந்தது என்றால் சரிதான். சர்வே எண் **166**/**7** எ **1**க்கு வடக்கு பகுதியிலும் கிழக்கு பகுதியிலும் சர்வே எண் **166**/**7** எ **2** இருந்தது என்றால் சரிதான். மேற்படி **2** இனசொத்துக்கும் மேற்கு பகுதியில் கிராமநத்தம் சாலை என்றால் சரிதான்.

**2**. சர்வே எண் **166**/**7** எ **2**க்கு கிழக்கு பக்கம் வாதியின் வீடு இருந்தது என்றால் சரிதான். மேற்கு பகுதியில் உள்ள சாலையிலிருந்து வாதியின் வீட்டிற்கு செல்வதற்கு சர்வே எண் **166**/**7** எ **2** தான் வழி என்றால் சரிதான். சர்வே எண் **166**/**7** எ **2**ல் வடகிழக்கு மூலையில் வாதி வீட்டின் தாய்சுவர் இருந்தது என்றால் சரிதான். சர்வே எண் **166**/**7** எ **1** ல் **7** செண்டும் சர்வே எண் **166**/**7** எ **2**ல் **2 1**/**2** செண்டும் அளவீடு செய்யும்படி எனக்கு உத்தரவு

வழங்கபட்டது என்றால் சரிதான். அதில் சர்வே எண் 166/7எ1ல் 6 1/2 செண்ட் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 6 1/2செண்டில் புதியதாக கட்டப்பட்ட கல்வீடும் அதற்கு அருகில் களனடைந்த கூரைவீடும் இருந்தது என்றால் சரிதான்.

3. 1/2செண்ட் நிலத்தினை தனியாக அளந்துகாட்டும்படி இரு தரப்பினர்களும் இரு தரப்பினரின் வழக்கறிஞர்களும் கோரினார்கள் என்றால் சரிதான். முதலில் வாதி வழக்கறிஞர் கோரினார். அதன்படி நான் பிரதிவாதிகளிடம் கேட்டபோது அவர்களும் ஒப்புக்கொண்டதால் 1/2செண்ட் நிலத்தினை தனியாக அளவீடு செய்தேன்.